1973 மார்ச் 31] [திரு. அ. பெ. தர்மலிங்கம்]

பேரறிஞர் அண்ணு அவர்கள், முக்குலத்தோரை மாத்திரமல்ல எங்களையெல்லாம் ஆளாக்குகிற நோக்கில் நாம் எல்லோரும் ஒரே தாயின் வயிற்றில் பிறப்பதற்கு, அந்தத் தாயின் வயிறு தாங்காது என்ற காரணத்தால் தனித் தனியே தாயின் வயிற்றில் பிறந்திருந்தாலும், நாமெல்லாம் ஒரேகுடும்பத்தைச் சார்ந்தவர்கள் என்ற குடும்ப பாசத்தை அரசியலில் வளர்த்தார்கள். அந்தப் பெருமை பேரறிஞர் அண்ணு அவர்களைத்தான் சாரும்.

அந்த வகையில் நான் பெருமையோடு அதை எடுத்துக்கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன். நண்பர் சுப்பு அவர்கள் ஏதோ அமைச்சர் அன்பில் அவர் களுக்கு உறவினர் என்று சொல்லி அவர் ஏதோ சலுகை பெற்றுவிட்டார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். இன்று அமைச்சர் மட்டுமல்ல, சட்டமன்ற உறுப்பினர்கள் கூட என்னிடத்தில் உறவினர்கள் என்று சொல்லி இருப்பதைப் பார்க்கிறோம்.

எனவே அவர் சாட்டியிருக்கின்ற குற்றச்சாட்டில் சொல்லப்பட்டவர் எனக்கு உறவினரும் அல்ல, சொந்தக்காரரும் அல்ல என்று சொல்லிக்கொள்கிறேன். முக்குலத்தோரைச் சார்ந்தவர் என்ற முறையில் சொல்லியிருந்தால், பல பேர் இங்கேயே என் இனத்தைச் சார்ந்தவர்கள் இருக்கிறார்கள். அவர்களெல்லாம் என்னுடைய உறவினர் என்று கருதினல், அண்ணு அவர்களின் தத்துவத்தின் படி சுப்பு அவர்களையும் உறவினராக ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். அவர் சுட்டிக் காட்டியிருக்கும் அந்த நபருக்கும் எனக்கும் சொந்தமோ, பந்தமோ இல்லை என்பதை நான் இந்தச் சபைக்கு விளக்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

(7) அறிக்கை அளித்தல்.

ஆளுநர் பேருரையின்போது வெளிநடப்புச் செய்த சில உறுப்பினர்கள் மீதும், டாக்டர் எச். வி. ஹாண்டே, தென்னகம் நாளிதழ் அச்சிடுவோர், வெளியிடுபவர் ஆகியோர் மீது கொண்டுவரப்பட்டுள்ள வழக்குகள் மீதான அவையுரிமைக் குழுவின் இடைக்கால அறிக்கை.

MR. DEPUTY SPEAKER: The hon. Member Thiru M. A. Latheef will now present the Reports of the Committee of Privileges on behalf of the Chairman.

THIRU M. A. LATHEEF: Sir, on behalf of the Chairman of the Committee of Privileges, I present the Interim Reports on (i) the matter of privilege against certain Opposition Members who staged walk-out just before the Governor's Address on 2nd

February 1973 and (ii) the matter of privilege against Dr. H. V. Hande and Editor and Publisher and Printer of the Tamil Daily 'Thennagam'.

Sir, on behalf of the Chairman of the Committee of Privileges, I move—

"That under Rule 191 (b) of the Assembly Rules, the Reports of the Committee of Privileges presented to the Assembly today be taken into consideration."

The motion was put and carried and the reports were taken into consideration.

MR. DEPUTY SPEAKER: The hon. Member Thiru Latheef will now move that "the Assembly agrees with the recommendations contained in the reports."

THIRU M. A. LATHEF: Sir, on behalf of the Chairman of the Committee of Privileges, I move—

"That under Rule 191 (d) of the Assembly Rules, this Assembly agrees with the recommendations contained in these Reports."

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Sir, there is no report at all placed on the table of the House.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: தேடிப் பாருங்கள். அங்கே இருக்கும். நீங்கள் லேட்டாக வருகிறீர்கள். மற்ற உறுப்பினர்கள் உங்களுடையதை எடுத்துக்கொண்டிருப்பார்கள்.

THIRU K. T. K. THANGAMANI: Usually these reports used to be printed and circulated. This one is a typed copy . . .

THIRU R. PONNAPPA NADAR: Sir, may I say something regarding this. Sir, now that the motion is before the House I would like to say a few words. So far as these instances are concerned, I think it is better that we drop the whole matter. That is my humble request. So far as walk-out is concerned, there are several instances in several legislatures where such things have happened . . .

MR. DEPUTY SPEAKER: We are sending these matters to the next Committee. That is all.

டாக்டர் எச். வி. ஹாண்டே: இது அடுத்த கமிட்டிக்குப் போகிறது. இன்னொரு கமிட்டிக்குப் போகிறது. அவ்வளவுதான்.

1973 மார்ச் 31]

MR. DEPUTY SPEAKER: The hon. Members have got the right to discuss any motion brought before the House. But here, we are referring these matters to the next Committee.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: அனுப்பாமலே விட்டாலும் ஒன்றும் இல்லே, நாம் பெருந்தன்மையாக இருப்பதால் ஒன்றும் நஷ்டமில்லே.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அனுப்பாமல் விடலாம். முடிவு என்ன என்று தெரிந்து கொண்டு விடலாம் அல்லவா?

The motion moved by Thiru M. A. Latheef was put and carried.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இன்று நம்முடைய பிசினெஸ் அட்வைசரிக் கமிட்டியில் 3 மசோதாக்களை எடுப்பது என்று முடிவு செய்து இருக்கிறோம்.

(8) அரசினர் சட்ட முன்வடிவு.

தமிழ் நாடு 1972-ம் ஆண்டு கட்டடங்கள் (குத்தகை, வாடகைக் கட்டுப்பாடு) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவு* (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 39/72) கூட்டாய்வுக் குழு திருத்தியமைத்தவாறு.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, "கூட்டாய்வுக் குழு திருத்தியமைத்தவாறு உள்ள தமிழ் நாடு 1972-ம் ஆண்டு கட்டடங்கள் (குத்தகை, வாடகைக் கட்டுப்பாடு) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவு (பேரவைச் சட்ட முன்வடிவு எண் 39/1972) ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்", என்று நான் கோருகிறேன்.

(திரு. நா. வீராசாமி தலைமை)

பேரவையில் அறிமுகம் செய்யப்பட்ட இந்தச் சட்டமுன்வடிவு அவையின் ஒப்புதலோடு கூட்டாய்வுக் குழுவின் ஆய்வுக்கு அனுப்பப்பட்டது. கூட்டாய்வுக் குழுவில் பேரவை, மேலவை உறுப்பினர்கள் கலந்து கொண்டு தங்களுடைய விரிவான, விளக்கமான விவாதத்திற்குப் பின் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்தார்கள். மாண்புமிகு அங்கத்தினர் திரு. தங்கமணி அவர்கள் தவிர

---

* 15—3—1973-ம் தேதிய தமிழ் நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பட்டுள்ளது.